# காலை முரசு


பக்கங்கள்:-24

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 07 | சனிக்கிழமை | 23.08.2025 | அதிர்வு 22


## சந்தேகநபர் ஒருவர் சுட்டுப் படுகொலை



அம்பாந்தோட்டை, சூரியவெவ பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட 08



# கைவிலங்குடன் ரணில் விளக்கமறியல் சிறைக்கு

## செவ்வாய் வரை தடுப்புக் காவலில்

166 இலட்சம் ரூபா பொதுமக்கள் பணத்தை முறையற்ற விதத்தில் பயன் படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்ககைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார். 08

# சிறை வைத்தியசாலையில் ரணில் உடனடியாகச் சேர்ப்பு

## இரத்த அழுத்தம், இரத்தத்தில் சீனியின் அளவு உயர்வு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் செய்தித் தொடர்பாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்னதாக விளக்கமறியலில் வைக்கப்படுவதற்காக ரணில் விக்கிரமசிங்க, பலத்த 08




'ஊசி போகுமிடம் பார்ப்பார். உலக்கை போகுமிடம் பாரார்.' – என்று சொல்லுவார்கள். அந்த மாதிரி இருக்கின்றது இப்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து, அவரைக் கைது செய்து, கை விலங்கிட்டு, விளக்க மறியல் சிறைக்கு அழைத்துச் சென்ற அரசு தரப்பின் நடவடிக்கை.

பட்டலந்த வதை முகாம் தொடர்பான விசாரணை, பிணைமுறி ஊழல் தொடர்பான விசாரணை, பார் பெர்மிட் வழங்கல் தொடர்பான விசாரணை என்று பல்வேறு விடயங்களில் ரணில் விக்கிரமசிங்கவை மாட்டுவதற்கு முயற்சித்த ஆளும் தரப்பு, அந்த 'உலக்கைகள்' எல்லாவற்றையும் கோட்டை விட்டு விட்டு, இப்போது 'ஊசி' போன்ற – அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பும் வழியில் லண்டனில் பயணத்தை இரண்டு நாள்கள் முறித்துக்கொண்டமை தொடர்பான நிதிச் செலவீனத்தை வைத்து, ரணிலைக் கைவிலங்கிட்டு, விளக்க மறியலுக்கு கொண்டு சென்று இருக்கின்றது. 08

# நீதிமன்றத்துக்கு ரணில் கூட்டி வரப்பட்ட போது....!



# அரசியல் தீர்வுக்கான திட்டங்கள் என்னவென்பதை அறிவியுங்கள்

## சபையில் பிரேரணையைச் சமர்ப்பித்து அரசிடம் சிறீதரன் எம்.பி. வேண்டுகோள்



"இந்த அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தை நிறைவு செய்யவுள்ள நிலையில் 80 ஆண்டுகள் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்ற கேள்வி எழுகின்றது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் 7 தடவைகள் விசேட உரையாற்றியுள்ளார். இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் மூலோபாயம் மற்றும் அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. கடந்த கால ஆட்சியாளர்களைப் போன்று தற்போதைய ஜனாதிபதியும் செயற்படக் கூடாது. கடந்த தீர்வுத் திட்டங்களை மக்கள் விடுதலை முன்னணிதான் எதிர்த்தது. எதிர்த்தவர்களே தீர்வு வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே காத்திரமான நடவடிக்கைகளைப் பகிரங்கமாக அறிவியுங்கள். பேச்சுவார்த்தையின் ஊடாகத் தீர்வு காணத் தயாராகவே உள்ளோம்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணையைக் கொண்டு வந்துள்ளேன். இலங்கையில் வாழும் சுதேசிய இனத்தவர்களான தமிழ்த் தேசிய மக்கள் நீண்ட காலம் எதிர்கொண்டு வரும் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பில் இந்தப் பிரேரணையை முன்வைக்கின்றேன்.

தேசிய இனப்பிரச்சினைக்குக் கௌரவமான நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வை எட்டுவதற்கும், அதிகாரப் பகிர்வுக்கான பேச்சுவார்த்தைக் கதவுகளைத் திறப்பதற்கும் கடந்த எட்டு வருடங்களாகத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாதத் தடைச் சட்டம் ஊடான கைதுகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சுயாதீனச் செயற்பாட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மலையக மக்கள் எதிர்கொள்ளும் காணி, வீட்டுரிமைக்கான கடந்த காலத் தீர்வு முயற்சிகள் இன்றும் இழுபறி நிலையில் உள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்கு இதுவரையில் தீர்வு கிடைக்கவில்லை.

இந்த நாட்டில் தமிழ்த் தேசிய இனம், சிங்கள தேசிய இனம் என்று இரண்டு தேசிய இனங்கள் உள்ளன. தேசிய இனங்களுக்கிடையிலான நீண்டகால பிரச்சினைகள் சுமார் 80 ஆண்டுகாலமாக நிலைத்திருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முன்மாதிரியான நடவடிக்கைகள் ஏதும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

1957 ஆம் ஆண்டு பண்டா – செல்வா ஒப்பந்தம், 1965 ஆம் ஆண்டு டட்லி – செல்வா ஒப்பந்தமும் இந்த நாட்டில் கிழித்தெறியப்பட்டன. இவை அடிப்படைத் தீர்வாக முன்வைக்கப்படவில்லை.

தமிழ் அரசியல் தலைவர்கள் நீதியான முறையில் அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு நாடாளுமன்றத்தில் முன்வைத்த கோரிக்கைகள், பிரேரணைகள் கிடப்பில் போடப்பட்டன. ஓர் அரசியல் தீர்வுக்கான முக்கிய அடித்தளத்தையிட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டு 38 ஆண்டுகளைக் கடந்துள்ளது. இருப்பினும் இந்த ஒப்பந்தம் படுக்கையில் கிடக்கும் நோயாளி போன்றே இன்றும் உள்ளது. எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

அரசியல் தீர்வுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட சர்வதேச ஒப்பந்தமான இலங்கை – இந்திய ஒப்பந்தம் இன்றும் இழுபறி நிலையில் உள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சியில் மங்கள முனசிங்க தெரிவுக் குழு யோசனைகள் முன்வைக்கப்பட்டன. இந்த யோசனைகள் பேசப்பட்ட காலத்தில் எவ்வித தீர்வுகளும் எடுக்கப்படவில்லை.

பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம், இலங்கை – இந்திய ஒப்பந்தம், மங்கள முனசிங்க தெரிவுக் குழு யோசனைகள் உட்பட அனைத்தும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1995 – 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொண்ட தீர்வு ஆலோசனைகளின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாடாளுமன்றத்துக்குச் சட்டமூலமாக தீர்வு ஆலோசனையாகப் பிராந்தியக் கூட்டு சமர்ப்பிக்கப்பட்டது. இதுவும் காலவோட்டத்தில் மறக்கடிக்கப்பட்டது. சிங்களத் தலைவர்கள் இந்தத் திட்டங்களைக் கடுமையாக எதிர்த்தார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவிவகித்த காலப் பகுதியில் ஒஸ்லோ மற்றும் டோக்கியோவில் வெளியிடப்பட்ட பிரகடனங்கள் ஏதும் அமுல்படுத்தப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழு, பல்லின நிபுணர் குழு அதிகாரப் பகிர்வுக்கு 13 பிளஸ் என்பதை வலியுறுத்தின.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்தை நிறைவு செய்யவுள்ள நிலையில் 80 ஆண்டுகள் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்ற கேள்வி எழுகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் 7 தடவைகள் விசேட உரையாற்றியுள்ளார்.

இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் மூலோபாயம் மற்றும் அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை.

ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் தாய்க் கட்சி கடந்த காலங்களில் பாரிய போராட்டங்களை எதிர்கொண்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் 62 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளார்கள். ஆகவே போராட்டங்களின் விளைவுகளை அவர்கள் நன்கு அறிவார்கள்.

இந்தச் சித்திரவதைகளை நாங்களும் எதிர்கொண்டுள்ளோம். தமிழ் மக்கள் தமது விடுதலைக்காகப் பாரிய போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இழப்புக்கள் மாத்திரமே மிகுதியாகின.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னரும் தமிழ் மக்களின் உடல்கள் பல்வேறு இடங்களில் கண்டறியப்படுகின்றன. தேசிய விடுதலைக்காக ஆயுதமேந்திய போராட்டம், ஜனநாயகப் போராட்டங்கள், அரசியல் போராட்டங்கள் ஆயுத முனையில் நசுக்கப்பட்டதால் எம் மக்கள் ஆயுதமேந்தினார்கள்.

இதனைச் சுட்டிக்காட்டி மேதகு பிரபாகரன் "ஜே.ஆர் ஜயவர்தன சரியான பௌத்தராகச் செயற்பட்டிருந்தால் நாங்கள் ஆயுதமேந்தும் நிலை ஏற்பட்டிருக்காது" என்று குறிப்பிட்டிருந்தார்.

1952 ஆம் ஆண்டு எமது தமிழ்த் தலைவர்கள் காலிமுகத்திடலில் அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்ட போது இராணுவம், பொலிஸ் மற்றும் குண்டர்களைக் கொண்டு எமது தலைவர்கள் தாக்கப்பட்டார்கள்.

இதன் பின்னரே எமது அறவழிப்

தொடர்ச்சி▼

# அரசியல் தீர்வுக்கான திட்டங்கள் என்னவென்பதை அறிவியுங்கள்

## சபையில் பிரேரணையைச் சமர்ப்பித்து அரசிடம் சிறீதரன் எம்.பி. வேண்டுகோள்

தொடர்ச்சி▲

போராட்டங்கள் நசுக்கப்பட்டன. நாங்கள் உங்களிடம் சவால் விடவில்லை. ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படவில்லை. எம்மைச் சமமாகக் கொண்டு அரசியல் தீர்வுக்குரிய பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.

தேசிய இனத்துடனான அடையாளத்துடன் ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்புகின்றோம். இந்த நாட்டில் பூர்வீகமாகத் தமிழர்கள் வாழ்ந்துள்ளார்கள். இயக்கர், நாகர்கள் வாழ்ந்துள்ளார்கள். நாங்கள் இறையாண்மையுடன் வாழ்ந்துள்ளோம். இந்த இறையாண்மை சிங்கள வல்லாதிக்கத்தில் இன்றும் உள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வினையே நாங்கள் கோருகின்றோம். ஒன்றுப்பட்ட, தூய்மையான மற்றும் வளமான இலங்கையை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதிகுறிப்பிடுகின்றார். அவ்வாறாயின் ஏன் எம்மையும் தேசிய இனமாக இணைத்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இலங்கைமுன்னேற்றமடையவேண்டுமாயின் அச்சமின்றிய வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். சமாதானத்துக்கான கதவுகளைத் திறங்கள். கலந்துரையாடுவதற்குத் தமிழ்த் தலைமைகள் தயாராகவுள்ளோம்.

எம் மக்களை யார் கொன்று குவித்தார்களோ, அவர்களிடமே விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குற்றம் புரிந்தவர்களே நீதிபதிகளாக இருக்கையில் எவ்வாறு உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதி கிடைக்கும்?

யாழ்ப்பாணம் – செம்மணியில் கண்டுப்பிடிக்கப்படும் மனித எலும்புக்கூடுகள் தமிழர்களுடையவை என்பது உறுதியாகியுள்ளது. இயற்கை என்றும் தவறு விடுவதில்லை. இந்தச் செம்மணி – சித்துப்பாத்தி எலும்புக்கூடுகளை இயற்கையே காட்டிக்கொடுத்தது. இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்குப் பல கடிதங்களை அனுப்பிவைத்துள்ளேன். இந்தக் கடிதங்களைச் சபைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

சிவில் நடவடிக்கைகளில் இராணுவத்தின் செயற்பாடுகள், அடக்குமுறைகள், தமிழ்மக்கள்எதிர்கொள்ளும்பிரச்சினைகளை எடுத்துரைத்துள்ளேன்.

அண்மையில் முல்லைத்தீவு – முத்துஐயன்கட்டுப் பகுதியில் இளைஞர் ஒருவர்கொலைசெய்யப்பட்டுள்ளார். மனிதர்கள் தவறிழைக்கலாம். ஆனால், அடித்துக் கொலை செய்வதற்கு இராணுவத்துக்கு யார் அனுமதியளித்தது? இவ்வாறான பிரச்சினைகளுக்கு அரசு உடன் தீர்வு காண வேண்டும்.

1987ஆம் ஆண்டு இலங்கை – இந்தியஒப்பந்தம்கொண்டுவரப்பட்டபோதும் எதிர்ப்புத் தெரிவித்தீர்கள், 2000 ஆம் ஆண்டு வடக்கு – கிழக்கு தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததும்நீங்கள். வடக்கு, கிழக்கைப்பிரித்தீர்கள். ஆகவே, பிரச்சினைகள் உங்களிடம் உள்ளன.

கடந்த காலத் தீர்வுகளை இல்லாதொழிக்க மக்கள் விடுதலை முன்னணி முன்னின்று செயற்பட்டது. ஆகவே, தற்போது புதிய முகம் கொண்டுள்ளீர்கள். எனவே, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளை எடுங்கள். வரலாறு மீண்டும் ஒரு அரிய வாய்ப்பை உங்களுக்கு வழங்கியுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகள் விட்ட தவறை இந்த ஜனாதிபதி புரியமாட்டார் என்று எண்ணுகின்றோம். கடந்த காலத் தலைவர்களை இந்த மண் மறந்ததைப் போன்று தற்போதைய ஜனாதிபதியையும் எவரும் மறக்கக் கூடாது.

ஆகவே, வரலாற்றில் ஓர் அடையாளமாக அரசியல் தீர்வு காணுங்கள், காத்திரமான நடவடிக்கைகளை எடுங்கள். தீர்வுத் திட்டங்கள் என்னவென்பதை அறிவியுங்கள். இந்தப் பிரேரணை ஊடாக ஒரு புதிய வழி பிறக்கும் என்று கருதுகின்றேன்.” – என்றார்.

# வெளிநாட்டிலிருந்து வந்த பெண் யாழில் வாந்தி எடுத்து உயிரிழப்பு



கொலண்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில் வாந்தி எடுத்த குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கந்தர் மடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவலிங்கம் ஜெயலட்சமி (வயது 61) என்ற மூன்று பிள்ளைகளைகளின் தாயாராவார்.

மேற்படி குடும்பப் பெண் கந்தர் மடத்தில் தங்கி இருந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வாந்தி எடுத்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதும், சில மணித்தியாலங்களில் அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் விசாரணை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# சமஷ்டி என்பது பிரிவினைவாதம் அல்ல என்று சிங்கள மக்களிடம் அநுர அரசு கூற வேண்டும்!

## நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து



"அநுர அரசு சமஷ்டியைக் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சமஷ்டி என்பது பிரிவினைவாதம் அல்ல என்ற உண்மையைச் சிங்கள மக்களிடம் கூறும் வரையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்த அரசின் மீது நம்பிக்கை வைக்க முடியாது. அரசு வித்தியாசமானது என்ற அடிப்படை நம்பிக்கையாவது வளர்க்கத் தொடங்குங்கள்."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

"இலங்கைத் தமிழரசுக் கட்சியானது 1949ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட நாளில் இருந்து சமஷ்டி என்ற கோட்பாட்டை வலியுறுத்தி வரும் கட்சியாகும். ஆனால், இந்தப் பிரேரணையில் தமிழரின் இனப்பிரச்சினக்கான தீர்வு தொடர்பான சமஷ்டி என்ற கருத்து வலியுறுத்தப்படவில்லை.

அண்மைக்காலமாகத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தின் செயற்பாடுகள் அந்த நிலைப்பாட்டில் இருந்து விலகியுள்ளதாகவே எங்களின் குற்றச்சாட்டு உள்ளது.

ஆனால், நாடாளுமன்ற உறுபபினர் சிறீதரன் அவ்வாறான குற்றச்சாட்டைக் குறிப்பிடக்கூடியவர் அல்லர். எனினும், இந்தப் பிரேரணையானது அந்தக் கொள்கையைத் தவிர்த்திருப்பது எங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது.

கடந்த தேர்தலில் சமஷ்டிக்கும் மற்றும் பொறுப்புக்கூறலில் சர்வதேச விசாரணைக்குமாகவே ஆணையைப் பெற்றது. ஆனால், சர்வதேச விசாரணையும் இந்தப் பிரேரணையில் தவிர்க்கப்பட்டுள்ளமை ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது.

ஏன் இதனைக் குறிப்பிடுகின்றேன் என்றால் இந்த அரசு பக்கச்சார்பற்ற விசாரணையை நாங்கள் செய்வோம் என்றே கூறுகின்றது. கடந்த 70 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தின்படி இலங்கையின் இனப்பிரச்சினை இனவாதத்தின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது என்று அரசே கூறுகின்றது. அப்படியெனில் கடந்த 76 வருடங்களாக இயங்கிய அரச கட்டமைப்பில் தமிழர்கள் நம்பிக்கை வைக்க முடியுமா?

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று அரசு கூறுகின்றது. ஆனால், கடந்த வாரத்தில் குமணன் என்ற ஊடகவியலாளர் அழைக்கப்பட்டு அவரிடம் 7 மணித்தியாலங்கள் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இராணுவம் கொலைகளைச் செய்கின்றது. இந்த அரசிலேயே இது நடக்கின்றது. இந்த அரசு அந்த மனோநிலையில் இல்லை என்று கூறினாலும் அது நடப்பதற்கான காரணங்கள் உள்ளன.

அந்த மாற்றங்களைச் செய்வதற்கு இந்த அரசு நேர்மையாகச் செயற்படத் தயாராக இருந்தாலும் இந்த அரசு நிரந்தரமாக இங்கிருக்கப் போவதில்லை. ஜனநாயகத்தைக் கடைபிடிக்கும் அரசாக இருந்தால் அரசு மாறும். இருந்தவர்கள் இனவாதிகள் என்று இவர்களே கூறுகின்றனர்.

கடந்த 76 வருடங்களுக்கு மேலாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு எப்படிக் கிடைக்கும். ஜே.வி.பி. அல்லது என்.பி. பியை நிரந்தரமாக ஆட்சியில் வைப்பதன் ஊடாக மட்டுமே அதனைச் செய்யலாம்.

தமிழ் மக்கள் கண்மூடிக்கொண்டு அவர்களுக்கு வாக்களித்துக்கொண்டு இருக்க வேண்டும் என்பதா தீர்வு. தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் தீர்வு கிடைக்காதா? யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களுக்கு இனவாதம் பாயாது, பயங்கரவாதத் தடைச் சட்டம் பாயாது என்ற பாதுகாப்பு அவசியமல்லவா.

எமது தேச அடையாளம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது என்றால் அந்தத் தேச அடையாளத்தை அங்கீகரித்து நாங்களும் இந்தச் தேசத்தில் நிரந்தரமானவர்கள் என்பதனை அங்கீகரிப்பதில் என்ன தவறு உள்ளது. எனது சொந்த வீட்டில் என்னுடைய பிரச்சினையைக் கையாழுவதில் என்ன பிரச்சினை உள்ளது.?

உங்களின் வாயால் வாக்குறுதியை வழங்காமல் இருக்கின்றீர்கள். இதனை இந்த அரசு செய்வதற்குத் தயாராக இல்லை.

கடந்த 76 வருடங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் பயன்படுத்திய அதே சொற்பதற்களை இந்த அரசு பயன்படுத்த முடியாது. ஆனால் அதுதான் இன்னும் நடக்கின்றது. இங்கு தமிழ் மக்களுக்குச் சுயாட்சி வழங்குவதில் என்ன தவறு?

தமிழ் மக்களுக்கு தமது உரித்த இடத்தில் அங்கீகாரத்தை வழங்கி அவர்கள் ஆளக்கூடியதை உறுதிப்படுத்துவதில் என்ன பிரச்சினை உள்ளது. நாங்கள் வேறுபட்டவர்கள் என்பதை அங்கீகரிப்பதில் என்ன பிரச்சினை? இதன்மூலம் ஒற்றுமையை உருவாக்காதா? கடந்த 76 வருடங்களாக இலங்கையர்கள் என்ற போர்வையில் சிங்கள பௌத்தம் மட்டுமே ஆட்சி செய்தது.

நிரந்தரப் பெரும்பான்மை இனத்தின் நலன்களை மட்டும் கடைப்பிடித்த வரலாறுதான் உண்டு. இதனை நீங்கள் 5 வருடங்களில் மாற்ற முடியாது. நீங்கள் எத்தனை வருடங்கள் இருந்தாலும் ஜனநாயக ரீதியில் ஒருநாளில் உங்களின் ஆட்சி விழத்தான் போகின்றது.

வருகின்றவர்கள் பழையபடி நடந்துகொண்டால் தமிழ் மக்களின் நிலைமை என்ன? இதனை அரசமைப்பின் ஊடாக அங்கீகரிக்கக் கோருவது இனவாதமா? இது தவறா?

தென்னிலங்கை மக்கள் கடந்த 76 வருடங்களாக நடந்த அரசியலைக் கைவிட்டுள்ளனர். அதனால்தான் நீங்கள் ஆட்சிக்கு வந்துள்ளீர்கள். அந்த நிமிடத்தை நாங்கள் கைவிடக்கூடாது. இது திரும்பவும் வரப்போவதில்லை. உங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் உண்டு. உங்களை முற்றிலும் வித்தியாசமான தரப்பாக சிங்கள மக்கள் பார்க்கின்றனர்.

இவ்வளவு காலங்களிலும் இனவாதிகள் என்று நீங்களே குறிப்பிடுபவர்கள் கடந்த காலங்களில் செய்தவை அனைத்தையும் கேள்விக்குட்படுத்துவதில் சிங்கள மக்கள் உள்ளனர்.

இதனால் உங்களுக்கு ஒரு கடமை உள்ளது. அதாவது தமிழ் மக்கள் கூறும் சமஷ்டி பிரிவினைவாதம் அல்ல என்ற உண்மையை சிங்கள மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.

நீங்கள் சமஷ்டியைக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சமஷ்டி பிரிவினைவாதம் அல்ல என்ற உண்மையைச் சிங்கள மக்களிடம் நீங்கள் கூற வேண்டும். அந்த விவாதத்தை வெளிப்படையாக நடத்தலாம் என்று நீங்கள் கூறலாம். 76 வருடங்களாக சிங்கள மக்களுக்குக் கூறிய பொய்களை இன்றும் நீங்கள் திருத்தாமல் இருக்கின்றீர்கள்.

இங்கேதான் எங்களுக்கு சந்தேகங்கள் எழுகின்றன. ஒற்றையாட்சிதான் விருப்பம் என்று நீங்கள் கூறினாலும் தமிழர்கள் கூறும் சமஷ்டி பிரிவினை இல்லை. உலகத்தில் முன்னேறியுள்ள நாடுகள் கடைப்பிடிக்கின்ற கொள்கையே சமஷ்டி. அதனையும் நாங்கள் விவாதிக்கலாம் – பேசலாம் என்ற உண்மையைக் கூறுங்கள்." – என்றார்.



# தமிழ் மக்களுக்கு அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்

## நாடாளுமன்றில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

"காணிகள் விடுவிப்பு, காணாமல் போனவர்களுக்கு நீதி, தையிட்டி விகாரைப் பிரச்சினை உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு எமது அரசால் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றப்படும். இது உறுதி."

– இவ்வாறு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைப் பிரச்சினைகள் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று வெள்ளிக்கிழமை சபையில் முன்வைத்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

"அரசு தமிழ் மக்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்துவது உறுதி. அந்தவகையில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும். காணாமல்போனவர்களுக்கு நீதி வழங்கப்பட்டு. தையிட்டி விகாரைப் பிரச்சினைக்கு இரண்டு மாதங்களுக்குள் தீர்வு காணப்படும். அரசியல் கைதிகள் விடுதலை போன்றவை தொடர்பிலும் அரசு அதிக கவனம் செலுத்தி வருகின்றது. தமிழ் மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்காக அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் சிந்திக்கும்போதும் தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குறியாகியிருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஏனென்றால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் இன்று நேற்றைய பிரச்சினையல்ல. அது காலங்காலமாக புரையோடிப் போயுள்ள பிரச்சினையாகும்.

அதனை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது ஒரு சிலர் கூறுவது போல் இன்று தமிழ் மக்களின் பிரச்சினைகள் கேள்விக்குறியாகி இருக்கின்றன. தமிழ் மக்களின் நிலங்கள், உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. அவர்கள் தொடர்பில் பாகுபாடுகள் காட்டப்பட்டன. அதன் தொடர்ச்சியாகவே தற்போது தமிழ் மக்களின் இருப்புக் கேள்விக்குறியாகியுள்ளது.

1981 ஆம் ஆண்டு நாட்டின் சனத்தொகை மதிப்பீட்டின்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 8 இலட்சத்து 30 ஆயிரம் பேர் வாழ்ந்துள்ளார்கள். அந்த நிலை தொடர்ந்திருக்குமானால் இன்று 16, 18 இலட்சம் மக்கள் அங்கு வாழ்ந்திருப்பார்கள்.

தற்போது அங்கு 6 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் மட்டுமே வாழ்கின்றார்கள் என்பதே வேதனைக்குரிய விடயம். அன்று 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள். இப்போது 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள். அடுத்து அதுவும் குறைவடையலாம். அந்தவகையில் அரசியல் ரீதியான இருப்பும் கேள்விக்குறியாகியுள்ளது.

அந்த மக்களின் வெளியேற்றமே இந்தக் கேள்விக்குறிக்கான காரணம். கடந்த யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்டுள்ளார்கள். அதுமட்டுமின்றி காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளார்கள். அதில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளார்கள். இதன் மூலமே பல்லாயிரக்கணக்கான மக்கள் இழக்கப்பட்டுள்ளார்கள்.

இப்போதும் மாணவர்கள், புத்திஜீவிகள் அங்கிருந்து வெளியேறும் மனநிலை அதிகரித்திருக்கின்றது.

ஒரு காலத்தில் கல்வி ரீதியில் பெரும் முன்னேற்றமடைந்த மாவட்டமாக வடக்கு விளங்கியது. எனினும், கடந்த 10 வருடங்களைப் பார்க்கும் போது கல்வியில் மிகவும் பின் தங்கிய நிலையே காணப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் நிறைவடைந்துள்ள போதும் அதன் வடுக்கள் ஆற்றப்படவில்லை. அதன் காரணமாகவே இவ்வாறான ஒரு பிரேரணையைச் சிறீதரன் எம்.பி. சபையில் முன்வைத்துள்ளார்.

இவ்வாறு மக்கள் வெளியேறுவார்களானால் இன்னும் சில காலங்களில் மக்கள் இல்லாத யாழ்ப்பாணமே இருக்கும். இந்த நிலைமையில் இருந்து அந்த மக்களைப் பாதுகாப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையே நாம் சிந்திக்கின்றோம். அதற்காகவே அரசு வடக்குக்கான துரிதமான அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன்மொழிந்துள்ளது.

அந்தவகையில் பல திட்டங்கள் வடக்கில் தற்போது வேகமாக முன்னெடுக்கப்படுகின்றன. மூன்று தொழில்பேட்டைகளை அங்கு உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் பகுதிகளில் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விமான நிலையம் துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் எதிர்காலத்தில் இந்த நாட்டில் வாழலாம் என்ற நம்பிக்கை தரும் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான வேலைத்திட்டங்களையே எமது அரசு முன்னெடுத்துள்ளது.

இழக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டுமானால் வடக்கில் மக்கள் வாழவேண்டும். அதன் பின்னரே சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவதா அல்லது தனிநாட்டுக்காகப் போராடுவதா என்பதைத் தீர்மானிக்க முடியும். அவர்கள் இலங்கையில் வாழுகின்ற மனநிலையை உருவாக்குவது அவசியமாகும்." – என்றார்.



# யார் தவறு செய்தாலும் அவர்களை எமது அரசு சட்டத்தின் முன் நிறுத்தும்

## சபையில் அமைச்சர் ஆனந்த விஜேபால திட்டவட்டம்

“வீழ்ச்சியடைந்திருந்த சட்டத்தின் ஆட்சியைத் தற்போது நாங்கள் உறுதிப்படுத்தி வருகின்றோம். மக்களுக்கு இல்லாமல் போயிருந்த நீதியை, நியாயத்தை இந்தச் சமூகத்துக்கு வழங்கி வருகின்றோம். யார் தவறு செய்தாலும் அவர்களைச் சட்டத்துக்கு முன் கொண்டு வர இந்த அரசு பின்வாங்கப்போவதில்லை. அதனை நாங்கள் செய்து காட்டியிருக்கின்றோம்.”

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி எம்.பி. சிவஞானம் சிறீதரன் நேற்று வெள்ளிக்கிழமை சபையில் முன்வைத்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

“எமது அரசு ஆட்சிக்கு வர முன்னர் இந்த நாடு குற்றவாளிகளின் தேசமாகவும் ஒட்டுமொத்த சமூகமும் வீழ்ச்சியடைந்திருந்தது. அரச பொறிமுறை பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாகி மக்களுக்கு அரச சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருந்து வந்தது. இவ்வாறான நிலையிலேயே அநுர குமார திஸாநாயக்க இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

அரசு ஆட்சிக்கு வந்து 8 மாதங்களில் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி இருக்கின்றது. குறிப்பாக ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளது, தேசிய மட்டத்தில் வருமானம் அதிகரித்துள்ளது. பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பணம் அதிகரித்துள்ளது. இவ்வாறு பொருளாதார தரவுகளைப் பார்க்கும்போது அரசின் 10 மாதங்களில் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்ப எங்களுக்கு முடிந்திருக்கின்றது. பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடிந்தமை எங்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

மேலும் வீழ்ச்சியடைந்திருந்த சட்டத்தின் ஆட்சியைத் தற்போது நாங்கள் உறுதிப்படுத்தி வருகின்றோம். மக்களுக்கு இல்லாமல் போயிருந்த நீதியை, நியாயத்தை இந்தச் சமூகத்துக்கு வழங்கி வருகின்றோம். இன்று தராதரம் இல்லாமல் சட்டம் அனைவருக்கும் சமமாகச் செயற்படுத்தப்படுகின்றது. அது பொலிஸ்மா அதிபரா, அமைச்சரா, முன்னாள் ஜனாதிபதியா என்பது எங்களுக்கு ஏற்புடையதல்ல. அதனால் யார் தவறு செய்தாலும் அவர்களைச் சட்டத்துக்கு முன் கொண்டுவர இந்த அரசு பின்வாங்கப் போவதில்லை என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றோம்.

நாங்கள் இவ்வாறு செயற்படுத்தி இருக்கின்றோம். அண்மையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரின் மனைவி, புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கை பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிந்த நிலையில் இடம்பெற்றது என்பது தொடர்பில் விசாரணை இடம்பெறுகின்றது. விசாரணையில் அவர் குற்றவாளியாகினால், அவருக்கு எதிராகவும் சட்டம் நிலைநாட்டப்படும்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த நிலையில் தற்போது அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதனால் சட்டத்தைச் செயற்படுத்துவது என்பது தராதரம் பார்த்துச் செயற்படுத்தும் விடயமல்ல, தராதரம் பார்க்கப்படாமல் செயற்படுத்தப்படுவதாகும்.

ஊழல், மோசடி தொடர்பில் பாரியளவில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் இடம்பெற்ற அநியாயங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அதனால் நாட்டில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதியைப் பெற்றுத் தருவதாக உறுதியளிக்கின்றோம்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமசிங்கவின் கொலை தொடர்பான சாட்சிகள் மறைக்கப்பட்டிருந்தன. தற்போது அந்தச் சாட்சிகள் அனைத்தும் மீள எடுக்கப்பட்டு, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று கீத்நோயர் மீதான தாக்குதல் தொடர்பான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணைகள் முடிக்கப்பட்டு, தற்போது சட்டமா அதிபருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அது தொடர்பான குற்றப் பிரேரணை விரைவில் வழங்கப்படும்.

ஊடகவியலாளர் எக்னெலிகொட கடத்தப்பட்டமை தொடர்பான நீதிமன்ற விசாரணை இடம்பெறுகின்றது. அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதியை நிலைநாட்டுவோம். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

அதேபோன்று யுத்தத்தில் மரணித்தவர்களை நினைவுகூரும் உரிமையை நாங்கள் உறுதிப்படுத்தி இருக்கின்றோம். அது அவர்களின் உரிமை.” – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் சக்திக்கு அதிர்ஷ்டம் போல கிடைத்த இந்த ஆட்சி அதிகாரத்தின் வீழ்ச்சிக்கான 'கவுண்டவுன்' நேற்று ரணில் விக்கிரமசிங்க மீதான நடவடிக்கையுடன் ஆரம்பித்து விட்டது என்றே தோன்றுகின்றது.

2015 ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுடன் அடிபட்டுப் போன ராஜபக்ஷக்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவாக (மொட்டுக் கட்சியாக) 2018 உள்ளூராட்சி தேர்தலில் மீளெழுந்து 2019 ஜனாதிபதி தேர்தலிலும் 2020 நாடாளுமன்றத் தேர்தலிலும் அமோக வெற்றியீட்டினர். ஆனால் வந்த வேகத்திலேயே அடுத்த இரண்டு ஆண்டுகளில் அக்கட்சி காணாமல் போகும் நிலைமைக்கு மண் கவ்வியது.

இப்போது சரித்திரம் மீண்டும் திரும்புவதாகத் தெரிகின்றது.

அதே மாதிரி அடிமட்டத்திலிருந்து 2024 ஜனாதிபதி தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் பெரு வெற்றியீட்டி எழுச்சி பெற்ற தேசிய மக்கள் சக்தி, மொட்டுக் கட்சி போலவே, வந்த வேகத்தில் காணாமல் போவதற்கான ஆயத்தங்களை – தனக்குத் தானே குழி பறிக்கும் நடவடிக்கைகளை – ஆரம்பிக்கத் தொடங்கி விட்டதாகவே தெரிகின்றது.

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்ற கதையாக தன்பாட்டில் அரசியலில் ஓய்வு நிலைக்குப் போக வேண்டிய ரணில் விக்கிரமசிங்கவை பெரும் சக்தியாக உசுப்பேற்றி, ஊதிப் பெருப்பிக்கும் வேலையை அநுரகுமார திஸநாயக்கவின் அரசு மினக்கெட்டுச் செய்திருப்பதாக தெரிகின்றது.

ஊழல்,மோசடி, முறைகேடுகள், லஞ்ச லாவண்யங்கள் தொடர்பில் கையாளப்பட வேண்டிய – பல்லாயிரக்கணக்கு மடங்கான பெரிய விடயங்கள் இருக்கின்ற போதும் – கண்ணுக்குத் தெரியாத சிறிய விடயங்களை ஊதிப் பெருப்பித்து, அழிச்சாட்டியம் பண்ணுவதில் அநுர குமார திஸநாயக்கவின் அரசு பிடிவாதமாக இருப்பதாகவே படுகிறது.

அநுர குமார் திஸநாயக்க அரசின் இந்த நடவடிக்கைக்கு என்னதான் காரணங்கள், விளக்கங்கள், வியாக்கியானங்கள், சமாதானங்கள், கூறினாலும் மக்களால் அரசியல் பழிவாங்கல் திட்டமாகவே இது நோக்கப்படும்.

50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கொடூரமாகக் கொன்றழிக்கப்பட்டமை தொடர்பில் நீதி, நியாயமான – சர்வதேச நியமங்களுக்கு உட்பட்ட – பக்கச் சார்பற்ற – விசாரணைகளை நடத்துங்கள் என்று சர்வதேசமே வலியுறுத்தி நிற்கையில் அதைச் செய்ய மறுத்து, பேரினவாதப் போக்கில் பிடிவாதமாக நிற்கும் தேசிய மக்கள் சக்தி, ஒன்றரைக் கோடி ரூபா ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணத்தில் செலவான விடயத்தை பெரிய விவகாரம் ஆக்கி, ஏதோ சாதித்து விட்டமை போல சண்டப் பிரசண்டம் செய்கின்றது.

தமது தரப்பின் அரசியல் வீழ்ச்சிக்கான ஆரம்ப புள்ளியைத் தொடக்கி வைத்திருக்கிறார் அநுரகுமார திஸநாயக்க.

எதிரணியை ஒற்றுமைப்படுத்தி வலிமையாக இயங்குவதற்கான ஊக்க சக்தியை அவரே வாரி வழங்கியிருக்கிறார்.

கைகளில் விலங்கிட்டு சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க சிறையில் இருந்தபடி என்ன சிந்திப்பார்?

'அரசியல் எதிரியான சஜித் பிரேமதாஸவை வீழ்த்துவதற்காக, வெற்றி கிடைக்காத ஜனாதிபதித் தேர்தல் என்று தெரிந்தும், அதில் குதித்து, சஜித்துக்கு விழக்கக்கூடிய வாக்குகளை பிரித்து, அநுர குமார திஸநாயக்கவை அதிகாரத்துக்குக் கொண்டு வர வழி செய்தேனே...! அதன் விளைவுதான் இப்போது நான் கம்பி எண்ணும் துரதிஷ்டம்' – என்று இச்சமயத்திலாவது தமது தவறை எண்ணி, மனம் கலங்கி, இனியாவது எதிரணி ஐக்கியத்திற்காக 2015 இல் உழைத்த மாதிரி, பதவி லாபம் கருதாமல் உழைக்க வேண்டும் என்று சங்கற்பம் செய்யும் மனநிலையை விளக்கமறியல் தடுப்பு அவருக்குத் தருமானால் அது இந்த கைதினால் நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய லாபமாக மாறும்.

# காலில் வீக்கம் ஏற்பட்டதால் இளம் பெண் உயிரிழப்பு

காலில்வீக்கம்ஏற்பட்டநிலையில்யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஆலங்கேணி பூநகரியைச் சேர்ந்த கௌதமன் தமிழ்நிலா (வயது 24) என்று ஒரு பிள்ளையின் தாயாராவார்.

அவர் மூன்று மாதங்களுக்கு முன்னர் காலில் வீக்கம் ஏற்பட்டு பூநகரி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று குணமடைந்திருந்தார். மீண்டும் கால் வீங்கியதை எடுத்து இம்மாதம் 14 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை பூநகரி பொலிஸார் நெறிப்படுத்தினர்.

## கைவிலங்குடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைது செய்யப்பட்ட அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்னிரவு உத்தரவிட்டது.

இந்நிலையில் அவர் கை விலங்கிடப்பட்டு சிறைச்சாலை பஸ்ஸில் கொழும்பு கோட்டை நீதிமன்ற வளாகத்திலிருந்து புறப்பட்டார்.

முன்னதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டு கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

லண்டனுக்கு ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட உத்தியோகபூர்வ பயணம் தொடர்பாக வாக்குமூலம் அளிப்பதற்காக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குச் சென்றிருந்த நிலையில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றப் பகுதியில் நேற்றிரவு ஆதரவாளர்கள் களேபரத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் அந்தப் பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிலைமையைச் சமாளிக்க இராணுவத்தினரும் அதிரடிப் படையினரும் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

## சிறை வைத்தியசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்புடன் சிறைச்சாலை பஸ்ஸில் வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டார். அவர் வந்த பிறகு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனைகளைத் தொடர்ந்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில், அவர் சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரித்ததன் காரணமாக வைத்திய ஆலோசனையின் அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## சந்தேகநபர் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துப்பாக்கிச்சூட்டில் சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் கொஸ்கொட பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 31ஆம் திகதி கொஸ்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துவமொதர கடலாமைகள் பாதுகாப்பு மத்திய நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அறை ஒன்றில் உறங்கிக் கொண்டிருந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

அந்தமத்தியநிலையத்தின்உரிமையாளரின் மகனே இவ்வாறு கொலை செய்யப்பட்டதுடன் அவர் சுற்றுலா வழிகாட்டி ஒருவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் பிரதான துப்பாக்கிதாரி சூரியவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேவகம பகுதியில் மறைந்து இருக்கின்றார் என்று கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய காலி பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் விசேட அதிரப் படையினர் சந்தேகநபரைக் கைது செய்வதற்காக நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் சம்பவ இடத்துச் சென்று விசேட தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது சந்தேகநபர் பொலிஸார் மீது கைக்குண்டு ஒன்றை வீசியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்துப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர்மேற்கொண்டதுப்பாக்கிப்பிரயோகத்தின்போது அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவத்தின் போது பொலிஸ் விசேட அதிரப் படை உத்தியோகத்தர் ஒருவரும் காயமடைந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மக்கொன பிரதேசத்தைச் சேர்ந்த பெருவளை கோசல என அழைக்கப்படும் தொன்கோசல என்பவரே துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சூரியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஒன்றிணைந்த நேர அட்டவணையில் பஸ் சேவை முன்னெடுக்க நடவடிக்கை

ජාතික ගමනාගමන කොමිෂන් සභාව
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
National Transport Commission

எதிர்வரும் திங்கள் கிழமை நள்ளிரவு முதல் ஒன்றிணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டம் கொழும்பு – புத்தளம் மார்க்கத்தில் ஆரம்பிக்கப்படுமென அதன் தலைவர் பொறியியலாளர் பீ.ஏ.சந்திரபால தெரிவித்துள்ளார்

கொழும்பு – யாழ்ப்பாணம், கொழும்பு – மன்னார், கொழும்பு – குளியாபிட்டி ஆகிய மார்க்கங்களிலும் கொழும்பு, புத்தளம், அனுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் வீதிகளிலும் ஒன்றிணைந்த நேர அட்டவணையில்பஸ்சேவைகள்முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆகிய இரு நிறுவனங்களால் பொதுமக்களுக்கு தனித்தனியாக வழங்கப்பட்ட சேவைகளை ஒன்றிணைத்து ஒரே கால அட்டவணையில் சேவையில் ஈடுபடுத்த இதனூடாக நடவடிக்கை எடுக்கப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர், பொறியியலாளர் பீ.ஏ.சந்திரபால தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 25ஆம் திகதி முதல் முறையான நேர அட்டவணைக்கமைய பஸ்களை சேவையில் ஈடுபடுத்த தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோரி பருத்தித்துறையில் கவனவீர்ப்பு போராட்டம்

## பருத்தித்துறை நகர பிதா டக்ளஸ் போல் அழைப்பு

"இராணுவ, கடற்படை முகாம்களை அகற்றித்தருமாறு வலியுறுத்தி பருத்தித்துறையில் அமைதியான முறையில் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது."

– இவ்வாறு பருத்தித்துறை நகர பிதா டக்ளஸ் போல் தெரிவித்தார்.

பருத்தித்துறை நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நகர பிதா டக்ளஸ் போல் தலைமையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பருத்தித்துறை நீதவான வாசஸ்தலம், மாவட்ட நீதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலம், பருத்தித்துறை தபால் நிலையத்திற்கு சொந்தமான கட்டடத் தொகுதி, நகர சபையின் வாடி வீடு மற்றும் தனியாருக்கு சொந்தமான நிலப்பரப்புகளை ஆக்கிரமித்து பருத்துறை துறைமுக பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இராணுவ முகாமானது போருக்கு பின்னரான நகரின் வளர்ச்சிக்கு பாரிய தடைக்கல்லாக உள்ளது.

அத்துடன், எமது நகரின் அடையாளமான வெளிச்சவீட்டு பகுதி கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலாத்துறை வளர்ச்சி மற்றும் எமது கடற்றொழிலாளர்களின் தொழிலுக்கும் பாரிய தடையாக உள்ளது.

எமது பருத்தித்துறை நகரின் சொத்தாக காணப்படும் நீதிமன்ற வளாகம் இடப்பற்றாக்குறை காரணமாக வேறு இடத்திற்கு கொண்டுசெல்லப்பட உள்ளதாக வரும் செய்தி எமக்கு வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகின்றது. மேற்படி இராணுவ முகாமை அகற்றுவதன் மூலம் நீதிமன்றத்திற்கு தேவையான இடத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது நகரின் வளர்ச்சி கருதியும் பருத்தித்துறை வாழ் மக்களின் நன்மை கருதியும் மேகுறித்த இராணுவ, கடற்படை முகாம்களை அகற்றித்தருமாறு வலியுறுத்தி அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட உள்ள கவனவீர்ப்பு போராட்டமானது பருத்தித்துறை நகர் வர்த்தகர்கள், கடற்றொழில் சமூகம், பொது அமைப்புகள், பொதுமக்கள் ஆகியோரின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட உள்ளது.

இந்த போராட்டம் வரும் திங்கட் கிழமை காலை 8.00 மணியளவில் பருத்தித்துறை துறை முகப் பகுதியில் இருந்து ஆரம்பித்து பருத்தித்துறை பிரதேச செயலகம் வரை இடம்பெற்று மேற்குறித்த கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்பட உள்ளது.

பருத்திதுறை நகரை பாதுகாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இப் போராட்டம் மற்றும் பேரணியில் வர்த்தகர்கள், கடற்றொழிலாளர்கள், பொது அமைப்புகள், பொதுமக்கள் மற்றும் பருத்தித்துறை நகரின் வளர்ச்சியை விரும்பும் ஆர்வலர்கள் உள்ளிட்ட அனைவரையும் அழைத்து நிற்கின்றோம். என்றார்.

இதன்போது ஜனநாய தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் துணை தவிசாளரும், தமிழரசு கட்சி, சுயேட்சை குழு, ஈழமக்கள் ஜனநாயக கட்சி சார்பில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் உடனிருந்தனர். அத்துடன் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் தம்பிராசா சந்திரதாஸ் பங்கேற்று குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததுடன் கடற்றொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (100)

# போராட்டத்திற்கு ஆதரவு கோரி துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்









பருத்தித்துறை நகரின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் இராணுவ முகாம் களை அகற்ற வலியுறுத்தி பருத்தித் துறையில் முன்னெடுக்கப்பட உள்ள கவனயீர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு கோரும் வகையில் பருத்தித்துறை நகர் வர்த்தகர்களிடம் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கும் செயற்பாடு நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு பருத்தித்துறை துறைமுகப்பகுதியில் இருந்து குறித்த கவனயீர்ப்பு பேரணி ஆரம்பமாக உள்ள நிலையில் அன்றைய தினம் காலையில் குறித்த நேரத்திற்கு வர்த்தக நிலையங்களை மூடி போராட்டத்தில் பங்கேற்குமாறு கோரி துண்டுபிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

இதன்போது பருத்தித்துறை நகர பிதா வி.டக்ளஸ்போல் தலைமை யில் நகர சபை உறுப்பினர்கள் வர்த்தக நிலையங்களுக்கு நேரடியாக சென்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தி ருந்தனர்.

# வடக்கு உட்பட 4 மாகாணங்களில் புதிதாக 7 முதலீட்டு வலயங்கள்

இந்த வருடத்தில் புதிதாக 07 முதலீட்டு வலயங்கள் நிறுவப்படுமென இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

வட மாகாணத்தில் 03 முதலீட்டு வலயங்களும் வடமேல், கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் தலா ஒரு முதலீட்டு வலயமும் நிறுவப்படவுள்ளதாக அதன் தலைவர் அர்ஜுன ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

300 ஏக்கர் பரப்பளவில் வட மாகாணத்தின் காங் கேசன்துறை முதலீட்டு வலயத்தில் ஆடை மற்றும் தகவல் தொழில்நுட்ப துறைகளில் முதலீட்டு செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

200 ஏக்கர் பரப்பளவிலான பரந்தன் முதலீட்டு வலயத்தில் இரசாயன உற்பத்தி தொழிற்சாலைகளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படுமென இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் தெரிவித்தார்.

மாங்குளத்தில் 200 ஏக்கர் பரப்பளவிலான முதலீட்டு வலயம் அமைக்கப்படவுள்ளது.

விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்து ஏற்றுமதி செய்வதற்கான வசதிகள் இங்கு ஏற்படுத் தப்படவுள்ளன.

இரணவில முதலீட்டு வலயத்தில் சுற்றுலாத்துறை தொடர்பான செயற்றிட்டங்கள் நிறுவப்படவுள்ளதாக இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஏறாவூரில் நிறுவப்படவுள்ள முதலீட்டு வலயத்தில் ஆடை உற்பத்திக்கு அவசியமான மூலப் பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தில் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் நிறுவப்படவுள்ளன.

இந்த புதிய முதலீட்டு வலயங்கள் நிறுவப்படுகின்றமை யுடன் பிரதேச ரீதியாக முதலீட்டு வாய்ப்புகள் அதிகரித்து அதனுடன் இணைந்த பல்வேறு வேலைவாய்ப்புகள் உருவாக் கப்படுமென இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் தெரிவித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் கைது

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட விதமும், கைது செய்யப்பட்டமைக்கான காரணமும், அவர் அதற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டமையும் ஆளும் தேசிய மக்கள் சக்தி என்னவோ தன்னுடைய சாதனையாகக் கருதிப் பெருமைப்படும் நிலை இருந்தாலும், அது பூமரங்காக திரும்பி ஆட்சித் தரப்பை செல்வாக்கிழக்கச் செய்யும் விவகாரமாகவே மாறும் என்றே தோன்றுகின்றது.

வார இறுதி விடுமுறைக்கு முன்னான கடைசி வேலை நாளில் - வெள்ளிக்கிழமையன்று - ரணில் விக்ரமசிங்கவை வாக்குமூலம் பெற அழைத்து, பிற்பகலில் அவரைக் கைது செய்து, சிறையில் அடைத்தமை, உடனடியாக அவர் சார்பில் மேனிலை நீதிமன்றங்களில் மேன்முறையீடு செய்ய வாய்ப்பளிக்காமல் அவரை சில நாள்களாவது சிறையில் அடைத்து வைத்திருக்க வேண்டும் என்ற திட்டத்தில்தான் என்பது வெளிப்படையானது.

அவரைக் கைது செய்து விளக்கமறியலில் வைக்கும் திட்டம் ஏற்கனவே தயாராக இருந்தது என்பது ஆளுந் தரப்பு சார்பான ஊடகவியலாளர் ஒருவர் ஊடாகப் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தமை கவனிக்கப்பட வேண்டும்.

எம்.பியாக இருக்கின்ற போது சிறப்பு சலுகையில் வழங்கப்பட்ட வரி விதிப்பற்ற வாகன உரிமங்களை எப்போதுமே பெற்றுக் கொள்ளாதவர் ரணில் விக்கிரமசிங்க. ஏழு, எட்டுத் தடவைகளுக்கு மேல் அத்தகைய உரிமங்களைக் கோராமலேயே விட்டமை மூலம் நாட்டுக்கு பல கோடி ரூபா வீண்விரயம் ஏற்படாமல் பார்த்தவர். பல கோடி ரூபா பெறுமதியான சொந்த வீட்டையே தாம் படித்த பாடசாலைக்கு எழுதிக் கொடுத்தவர். தம்முடைய சொத்தில் பெரும்பகுதியை பௌத்த விகாரைகளுக்குத் தாரை வார்த்தவர். அவர் ஒன்றரைக் கோடி ரூபா அரசு நிதியை ஜனாதிபதியாக இருந்த போது தம்முடைய பயணத்துக்குச் செலவிட்டு துஷ்பிரயோகம் செய்தார் என்ற கூற்று எவ்வளவு தூரம் நியாயமானது என்பதை நீதிமன்றம் எப்படி கணித்தாலும் இலங்கை மக்கள் வேறு விதமாகவே பார்ப்பார்கள் என்பது கண்கூடு.

பின்னாளில்வைக்கப்படபோகின்ற பெரிய இலக்குக்கான முன்னாயத்த சிறிய இலக்குத்தான் ரணில் விக்கிரமசிங்க என்றும் சில தரப்புகள் கருதுகின்றன. அது உண்மையானால் அடுத்து மேலும் சில கைதுகள் அதிர்வை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் இடம் பெறலாம்.

இலங்கையில் ஊழல் உச்சம். துஷ்பிரயோகம் உச்சம். முறைகேடுகள் உச்சம். லஞ்ச, லாவண்ய உச்சம். அவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படத்தான் வேண்டும்.

ஆனால் இப்போது ரணில் விடயத்தில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டும் அவர் கைது செய்யப்பட்ட விதமும் அவரை விளக்க மறியலில் வைக்க வேண்டும் என்பதற்காக நடத்தப்பட்ட அழிச்சாட்டியமும் ஆளும் தரப்புக்குப் பெரும் அரசியல் பின்னடைவாக மாறக்கூடிய ஏது நிலைகளே தென்படுகின்றன.

அநுரகுமார திஸநாயக்கவின் ஆட்சி தொடர்பில் அடுத்தடுத்து அபஸ்வரம் ஒலிக்கத் தொடங்கி இருக்கின்றது. சந்தேகத்துக்குரிய பல பொருள்களுடன் வந்த முந்நூறுக்கும் அதிகமான கொள்கலன்கள் சுங்கச் சோதனை இன்றி கண்மூடித்தனமாக விடுவிக்கப்பட்டமை போன்ற பின்னடிப்புத் தருகின்ற அரசியல் நிகழ்வுகளில் ஒன்றாக ரணிலின் கைதும் அமையும் என்பது பலரின் கருத்தாக உள்ளது.




# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி திருவிழா இன்று ஆரம்பமாகின்றது!

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி, தொண்டைமானாறு, செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 16 தினங்கள் திருவிழா நடைபெறும்.

ஐந்தாம் திருவிழாவான எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை முதல் காலைத் திருவிழா ஆரம்பமாகும். அன்றையதினம் விநாயகப்பெருமானும் வேலவரும் ஒன்றிணைந்து வீதி உலா வருவார்கள்.

சிறப்புத் திருவிழாக்களான பத்தாம் திருவிழாவான பூங்காவனத்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமையும், 11ஆம் திருவிழாவான கைலாச வாகனத் திருவிழா 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் சப்பறத்திருவிழா 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கும் தேர்த்திருவிழா மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்கும், தீர்த்தத்திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கும் நடைபெறும். மௌனத் திருவிழாவுடன் வருடாந்த மகோற்சவம் நிறைவுபெறும்.

இம்முறை மகோற்சவ கால பிரதம குருவாக சிவஸ்ரீ சிவானந்தஜயர் செல்லமணி ஜயர் இருந்து திருவிழாவை நடத்தி வைப்பார்.

# நினைவகலா நினைவுகள்



பிறப்பு 21 * 10 * 1937

இறப்பு 23 * 08 * 2012

**இந்திரராசா செங்காரபிள்ளை**
(சங்கர்)



பிறப்பு 11 * 02 * 1936

இறப்பு 29 * 08 * 2009

**செங்காரபிள்ளை பூரணபாக்கியம்**

நேற்று வரை எம்முடன் வாழ்ந்தீர்கள் என்றே
உள்ளத்து உணர்வலைகள்
ஆசையுடன் அசைபோடுகின்றன - என்றாலும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை இறைஞ்சி அஞ்சலிக்கின்றோம்.

505, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



# பாகிஸ்தானில் தாக்குதல் தீவிரவாதிகள் 15 பேர் பலி

பாகிஸ்தானில் பாதுகாப்புப்படையினர் நடத்திய தாக்குதலில் 15 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் பைபர் பக்துவா மாகாணம் தெற்கு வாசிர்தான் மாவட்டம் ஆசன் வார்சக் பகுதியில் தீவிரவாதிகள் செயற்படுவதாக பாதுகாப்புப்படையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தான் பாதுகாப்புப்படையினர் அந்தப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அங்கு பதுங்கி இருந்த தீவிரவாதிகள், பாதுகாப்புப்படையினர் மீது துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதற்கு பதிலடியாக பாதுகாப்புப்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 15 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த மோதலின் போது பாதுகாப்புப்படையினரில் நான்கு பேரும் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# கொலம்பியாவில் இரு வேறு பகுதிகளில் பயங்கரவாதத் தாக்குதல்; 18 பேர் பலி



கொலம்பியாவில் இரு வேறு இடங்களில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொலம்பியாவில் அரசுக்கு எதிரான கிளர்ச்சி குழுவினர் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அந்தவகையில் நேற்று முன்தினம் அந்தியோகியா மாகாணத்தில், போதைப்பொருள் பயிர்களை அழிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளின் ஹெலிகாப்டர் மீது கிளர்ச்சியாளர்கள் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தினர்.

இதில் 12 பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்ததுடன் , 8 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்தின் பின்னர் காலி நகரில் உள்ள இராணுவப்பாடசாலை அருகே இடம்பெற்ற கார் குண்டுத் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்ததுடன், 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இத் தாக்குதல்களுக்கு, *FARC* கிளர்ச்சி பிரிவினரும், போதைப் பொருள் கும்பல்களும் காரணம் என கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இச்சம்பவம் உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கராச்சியில் வெடிப்பு சம்பவம் இருவர் பலி; 33 பேர் காயம்

பாகிஸ்தானின் கராச்சியில் தாஜ் மருத்துவமனைக்கு அருகிலுள்ள கிடங்கில் ஏற்பட்ட பாரிய வெடிப்பில் இருவர் உயிரிழந்ததுடன் 33 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 20 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பட்டாசு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் சேமித்து வைத்திருந்த இடத்திலேயே இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த வெடிப்பு சம்பவத்தால் தாக்கப்பட்ட கட்டடத்தின் கோபுரம் மற்றும் சுவர்கள் சேதமடைந்துள்ளதாகவும் கட்டடத்திற்கு அருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்கள் சேதமடைந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.







# தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி தி.மு.கவின் ஊழலுக்கு முடிவுகட்டும்

## நெல்லையில் அமித் ஷா உரை



"நாட்டிலேயே மிகப் பெரிய ஊழல் ஆட்சி என்றால், அது தி.மு.க. ஆட்சிதான். அனைத்து திட்டங்களிலும் ஊழல் செய்கிறார்கள். தமிழகத்தில் வரும் தேர்தலில் வெற்றி பெற்று தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும்போது இதற்கு முடிவு கட்டப்படும்."

– இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் மாவட்டங்களை உள்ளடக்கிய குமரி மண்டல அளவிலான பாஜக பூத் பொறுப்பாளர்கள் மாநாடு திருநெல்வேலியில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உரையாற்றுகையில்,

"புண்ணிய பூமியான தமிழகத்தில் உங்கள் மத்தியில் தமிழ் மொழியில் பேச முடியவில்லை என்பதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன்.

தமிழ் மண்ணின் பெருமையையும், தமிழ் மக்களின் உணர்வுகளையும் பிரதமர் மோடி உணர்ந்துள்ளார். கங்கை கொண்ட சோழபுரத்தில் ராஜேந்திர சோழனுக்கு சிலை நிறுவ உத்தரவிட்டுள்ளதோடு, கங்கை நீரால் பிரதீஸ்வரரர் சுவாமிக்கு மீண்டும் அபிஷேகம் செய்து புதிய சரித்திரம் படைத்துள்ளார். காசி தமிழ்ச் சங்கமம், சவுராஷ்டிரா தமிழ்ச் சங்கம் ஆகியவை மூலம் தமிழுக்கும் மேலும் பெருமை சேர்த்து வருகிறார். திருவள்ளுவரின் திருக்குறள் நூலை 13 இற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்க காரணமாக இருந்துள்ளார்.


காஷ்மீர் மாநிலத்தின் பஹல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் மதத்தின் பெயரால் அப்பாவி மக்களை கொன்றனர். ஆபரேஷன் சிந்தூர் மூலம் அவர்களுக்கு மோடி தகுந்த பதிலடி கொடுத்துள்ளார். பயங்கரவாதத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டுள்ளது. அருமையான குடிமக்கள், வலிமையான சேனை என்றெல்லாம் நல்லாட்சிக்கான நான்கு வழிகளை திருவள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ளார். அந்த திருக்குறள் வழி நின்று மோடி ஆட்சி செய்து வருகிறார்.

பிரதமர், முதல்வர் ஆகியோர் கைதாகி சிறைக்கு சென்று, 30 நாள்களுக்கு மேலிருந்தால் அவர்களது பதவி பறிபோகும் புதிய மசோதா மக்களவையில் அண்மையில் கொண்டு வரப்பட்டுள்ளது. அதனை எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றன. தமிழகத்தில் முன்னாள் அமைச்சர்கள் பொன்முடி, செந்தில் பாலாஜி ஆகியோர் சிறையில் இருந்துள்ளனர். சிறையில் இருந்தவர்கள் ஆட்சியாளர்களாக தொடர முடியுமா, சிறையில் இருந்துகொண்டே ஆட்சி நடத்த முடியுமா என்பதை மக்கள்தான் சொல்ல வேண்டும்.

மத்திய அரசின் இந்த புதிய மசோதா, கருப்புச் சட்டம் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறுகிறார். அவ்வாறு சொல்ல அவருக்கு எந்த உரிமையும் இல்லை. நாட்டிலேயே மிகப் பெரிய ஊழல் ஆட்சி என்றால், அது தி.மு.க. ஆட்சிதான். இங்கு ஏராளமான ஊழல்களை தொடர்ந்து செய்து வருகிறார்கள். டாஸ்மாக் ஊழல், எல்காட் ஊழல், போக்குவரத்து துறை ஊழல், இலவச வேட்டி – சேலையில் ஊழல், வேலைவாய்ப்பு வழங்குவதில் ஊழல் உள்ளிட்ட அனைத்து திட்டங்களிலும் ஊழல் செய்கிறார்கள். தமிழகத்தில் வரும் தேர்தலில் வெற்றி பெற்று தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும்போது இதற்கு முடிவுகட்டப்படும்.

தி.மு.கவும், காங்கிரஸும் தங்களது வாரிசுகளை அரியணையில் அமர்த்த துடிக்கிறார்கள். ஸ்டாலின் தனது மகன் உதயநிதியை முதல்வராக்கவும், சோனியா காந்தி தனது மகன் ராகுலை பிரதமராக்கவும் கனவு காண்கிறார்கள். அந்த கனவு ஒருபோதும் பலிக்காது. தமிழகத்தில் தி.மு.க. கூட்டணியை, தேசிய ஜனநாயக கூட்டணி நிச்சயம் தோற்கடிக்கும்." என்று தெரிவித்தார்.

# அமித் ஷாவுக்கு நயினார் நாகேந்திரன் வழங்கிய விருந்தில் 35 வகை உணவுகள்



திருநெல்வேலியில் நடைபெற்ற பா.ஜ.க. பூத் பொறுப்பாளர்கள் மாநாட்டில் பங்கேற்ற மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு அக்கட்சியின் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தனது இல்லத்தில் தேநீர் விருந்து அளித்தார்.

இந்த விருந்தில் சூடான திருநெல்வேலி அல்வா, வாழைக்காய் சிப்ஸ், முந்திரி பக்கோடா, மோதி லட்டு, ரோஸ் பிஸ்கட், பனீர் டிக்கா, பாதாம், பிஸ்தா, தேநீர், பாசிப்பயறு சுண்டல், வேர்க்கடலை சுண்டல், தட்டாம் பயறு சுண்டல் என 35 வகையான உணவு வகைகள் மற்றும் பானங்கள் இடம்பெற்றிருந்தன.

மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற தலைப்பில் திருநெல்வேலியில் சமீபத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமிக்கு தனது வீட்டில் நயினார் நாகேந்திரன் அளித்த இரவு விருந்தில் 110 வகையான உணவுகள் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களின் தாகம் தமிழீழம்தான்; ஆயினும் சூழ்நிலையால் சமஷ்டியைக் கோருகின்றனர்

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் இடித்துரைப்பு

(பா.சதீசன்)

தமிழ் மக்கள் தமிழீழத்தை அடைவதற்கே விரும்புகின்றனர். தற்போதுள்ள சூழ்நிலைகாரணமாகவே சமஷ்டியை எமது தமிழ் மக்கள் கோருகின்றார்கள் என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனினால் முன்வைக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றிய தேசியமக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பி திலகநாதன் தமிழ்மக்கள் தனிநாட்டையோ, சமஷ்டியையோ கோரவில்லை எனக் குறிப்பிட்டுப் பேசியிருந்தார்.

இந்நிலையில் அதனைத் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், உறுப்பினர் திலகநாதனின் இக்கருத்தைக் கண்டித்தமையுடன், மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் உரையாற்றுகையில் –

இறுதியாக இங்கு ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எமது மக்கள் தமிழீழம் வேண்டுமென்றே கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் வன்னி மாவட்டத்தைச் சார்ந்த அரசாங்கத்தில் அங்கம் வகிகமகும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பி திலகநாதன் எமது தமிழ் மக்கள் தனி




நாட்டையோ, சம்ஷ்டித் தீர்வினையோ கேட்கவில்லை எனத் தவறான கருத்தினை இங்கே பதிவுசெய்துள்ளார்.

அவரிடம் யாரும் தனிநாட்டையோ, சமஷ்ட்டியையோ கேட்கவில்லை எனவும் குறிப்பிட்டுப் பேசினார். தமிழ் மக்கள் யாரும் அவரிடம் கேட்கமாட்டார்கள். அரசாங்கத்திடமே கேட்பார்கள். எமது மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதனைப் பற்றியும், அவருடைய செயற்பாடுகள் தொடர்பிலும் நன்கு அறிவார்கள். எனவே அவரிடம் போய் தனிநாட்டையோ, சமஷ்டியையோ கேட்கமாட்டார்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டவிரும்புகின்றேன்.

ஒரு விடயத்தை இங்கு அழுத்தமாக கூறிவைக்கவிரும்புகின்றேன். எமது தமிழ்மக்கள் எப்போதும் கேட்பது தமிழ் ஈழத்தைத்தான். ஆனால் தற்போதுள்ள சூழ்நிலை காரணமாகவே தமிழ் மக்கள் சமஷ்டியைக் கோருகின்றனர். அவ்வாறிருக்க இங்கு வந்து பிழையான கருத்துக்களை பதிவுசெய்வதை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது – என்றார்.

# 'சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்' நூல் அறிமுக நிகழ்வு நாளை யாழ். நகரில்!




கம்யூனிஸ்ட் தலைவர் என். சண்முகதாசன் நூற்றாண்டை முன்னிட்டு அரசியல் ஆய்வாளர்கள், கல்விமான்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பான "சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்" (தமிழிலும் ஆங்கிலத்திலும்) நூலின் அறிமுகநிகழ்வு இன்று நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு எங்கட புத்தகங்கள் இல்லத்தில் (18ஃ2 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்) நடைபெறுகிறது.

எழுத்தாளர் வி.ரி.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூல் அறிமுகவுரையை சபா.தனுஜனும், கருத்துரையை சட்டத்தரணி



சோ.தேவராஜாவும் நிகழ்த்துவர்.

முன்னோடிகள் இலக்கிய வட்டம் (பாரிஸ் – கொழும்பு) நிகழ்வை ஏற்பாடு செய்திருக்கின்றது.



# யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 14 மாணவர்கள் சுற்றாடல் முன்னோடி பதக்கத்தைப் பெற்றனர்



பாடசாலைகள் தோறும் நடைமுறைப் படுத்தப் பட்டு வரும் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுற்றாடல் முன்னோடி அணியின் உயர் விருதான சுற்றாடல் முன்னோடி ஜனாதி பதி பதக்கம் வழங்கும் விழா ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாப கார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய அறிவுள்ள மாணவர்களுக்கு ஜனாதிபதி பதக்கங்களை வழங்கி அவர்களைப் பாராட்டுவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் கல்வி அமைச்சு இணைந்து, சுற்றுச்சூழல் முன்னோடி ஜனாதிபதி பதக்கம் வழங்கும் விழாவை ஆண்டு தோறும் ஏற்பாடு செய்கின்றனர்.

இம்முறை 11ஆவது தடவையாக நடைபெற்ற சுற்றுச்சூழல் முன்னோடி ஜனாதிபதி பதக்கம் வழங்கும் விழாவில், 192 சுற்றாடல் முன்னோடிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவிடமிருந்து ஜனாதிபதி பதக்கங்களைப் பெற்றனர். இவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 14 மாணவர்களும் இவ்விருதைப் பெற்றனர்.

பாடசாலை மாணவர்களை சுற்றுச்சூழல் முன்னோடிகளாக பயிற்சி அளித்த ஆசிரியர்களும் இந்த நிகழ்வில் கௌர விக்கப்பட்டனர்.

2025 சுற்றுச்சூழல் முன்னோடிகள் ஜனாதிபதி பதக்கம் வழங்கும் விழாவிற்காக தொகுக்கப்பட்ட சிறப்பு மலரும் ஜனாதிபதியிடம் இவ் விழாவில் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், சுற்றாடல் பிரதி அமைச்சர் என்டன் ஜயகொடி, கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கே.ஆர். உடுவாவல, கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சின் செயலா ளர் நாலக கலுவெவ, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் திலக் ஹேவாவசம், அதன் பணிப்பா ளர் நாயகம் பத்மசிறி மூணமலே ஆகியோருடன் மாகாண கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# சாவகச்சேரியில் முத்தமிழ் விழா

(த.சுபேசன்)

சாவகச்சேரி பெரியமாவடி சித்தி விநாயகர் கலை மன்றத்தின் 48ஆவது ஆண்டு விழாவும் முத்தமிழ் விழா நிகழ்வுகளும் இன்று சனிக்கிழமை மாலை 7.05மணிக்கு சித்தி விநாயகர் கலை அரங்கத்தில் இடம்பெறவுள்ளன.

நிலையத்தின் தலைவர் மு.கதிரவேலு தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவர் த.காண்டீபனும், சிறப்பு விருந்தினராக வர்த்தகர் ந.சிவபாலனும், கௌரவ விருந்தினராக கோவிற் குடியிருப்பு கிராம அலுவலர் ச.ஞானசேந்தனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது நடன நிகழ்வு, எழிலுரை நிகழ்வு. பட்டி மண்டபம், சிறுவர் நாடக நிகழ்வு மற்றும் இதிகாச நவீன நாடக நிகழ்வு ஆகியன இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு வீதி ஊர்வலமும் நாடகமும்

## மூதூர் - பாட்டாளிபுரத்தில் நேற்று நடந்தன




(எஸ்.கீதபொன்கலன்)

சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு வீதி ஊர்வலமும், வீதி நாடகமும் மூதூர் – பாட்டாளிபுரத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றன.

விழிப்புணர்வு ஊர்வலம் பாட்டாளிபுரம் கிராம அபிவிருத்தி சங்கக் கட்டட முன்றிலிலிருந்து ஆரம்பமாகி எபிநேசர் சிறுவர் அபிவிருத்தி மையம் வரை இடம்பெற்றது.

சிறுவர்களுக்கான சிறுவர் நேயம் உள்ளதும் பாதுகாப்பு மிக்கதுமான சூழல் ஒன்றை கட்டி எழுப்புவோம் எனும் தொனிப் பொருளின் கீழ் இவ் விழிப்புணர்வு வீதி ஊர்வலம் இடம்பெற்றது.

இதன்போது ஊர்வலத்தில் ஈடுபட்ட சிறுவர்கள் சுலோகங்களை ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வை பாட்டாளிபுரம் எபிநேசர் சிறுவர் அபிவிருத்தி மையம் ஏற்பாடு செய்திருந்தது.

ஊர்வலத்தில் சிறுவர், சிறுமியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.







# மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் ஆலய வருடாந்த ரதோற்சவம் நேற்று பக்திபூர்வமாக

(கனகராசா சரவணன்)

ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம் என அழைக்கப்படும் மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் ஆலய வருடாந்தத் தேரோட்டம் பல்லாயிக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஆலய பிரதமகுரு தலைமையில் இடம்பெற்றது.

கடந்த 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்த திருவிழாவில் நேற்று மாலை தேர்திருவிழாவில் முருக்கப் பொருமானுக்கு விசேட பூஜை வழிபாட்டுடன் தமிழ் மொழியில் பாராயணங்கள் ஓதப்பட்டு முருகப் பெருமான் சிறப்புத் தேரில் அருள் பாலித்தார்.

மாலை 3 மணிக்கு தேர் திருவிழா ஆரம்பித்தது. தேரில் ஆண்கள் ஒரு பகுதியாகவும் பெண்கள் ஒரு பகுதியாகவும் வடம் பித்து இழுக்க தேரோட்டம் இடம்பெற்றது. இந்த தேரோடத்தின் போது இலங்கையில் முதல் முதலாக வசந்தி கௌதவமும் வெளிவீதியில் நடனங்களும் ஆடப்பட்டு தோரோட்டம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது

ஆகம முறைப்பட அமைக்கப்பட்ட முருகப்பெருமானுகக்கு பூஜைவழிபாடு செய்யும் ஒரேஒரு ஆலயம் மகா துறவி ஓங்காரந்த சரஸ்வதியபல் உருவாக்கப்பட்டு ஒரு சித்தர் பீடமாக அருள் பாளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.









# 'ஒன்லைன்' மூலம் ரூ.45,000க்கு பொருள் வாங்கி பணம் செலுத்தாமல் தப்பியோடிய இளைஞன் கைது

**(பாறுக் ஷிஹான்)**

"ஒன்லைன்" மூலம் ரூபா 45,000 பெறுமதியான பொருளைஜ் கொள்வனவு செய்து உரிய பணத்தினை வழங்காமல் தப்பியோடிய இளைஞனை சம்மாந்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் ஒன்லைன் மூலம் கொள்வனவு செய்த பொருளை பெற்றுக் கொண்டு அதற்குரிய பணம் வழங்காது இளைஞன் தப்பி ஓடினார் எனக் கடந்த புதன்கிழமை முறைப்பாடு வழங்கப் பட்டிருந்தது.

இதற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி. எஸ் ஜெயலத்தின் வழிகாட்டலில் செயற்பட்ட பல்வேறு முறைப்பாட்டு பிரிவு பொறுப்பதிகாரி எம்.எச்.எம்.ஹசீப் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சம்மாந்துறை 01 பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனைக் கைது செய்தனர்.




இதன் போது கைதான இளைஞனிடம் இருந்து ஒன்லைன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருள் மீட்கப் பட்டுள்ளது. சந்தேக நபரை சான்றுப் பொருள்களுடன் நேற்று வெள்ளிக் கிழமையே சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் சட்டநடவடிக்கைக் காக ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டிருந்தது.





# திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத் தேர்

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத் தேர் உற்சவம் நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது.








# சிறுவரின் உரிமைகளைப் பாதுகாக்கக் கோரி முத்தையன்கட்டில் விழிப்புணர்வு நடைபவனி

(பா.சதீசன்)

சிறுவர் உரிமைகளை பாதுகாக்க கோரி விழிப்புணர்வு நடைபவனி முத்தையன்கட்டு ஜீவநகர் கிராமத்தில் பொது நோக்கு மண்டபத்திற்கு முன்பாக நேற்று மாலை 4 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு "நாம் சிறுவர் எம்மைக் காப்பீர்!" எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு பேரணியை முத்தையன்கட்டுக் குளம் கிராம சேவையாளர் பவிதா ஆரம்பித்து வைத்தார்.

முத்தையன்கட்டு ஜீவநகர் பொது நோக்கு மண்டபத்திற்கு முன்பாக ஆரம்பித்த பேரணி நடைபவனியாக சென்று ஜீவநகர் சமாதான சுவிஷேச தேவாலயத்தில் நிறைவு பெற்றது. ஜெபஆலயமிஷன் திருச்சபையின் கீழ் இயங்கும் பெத்தேல் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றிருந்தது.

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை கொடு, சிறுவர்களை பாதுகாப்போம், சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு மன்னிப்பு இல்லை, குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்திற்காக நாம் நமது நிகழ்காலத்தை தியாகம் செய்வோம், அமர்த்தாதே, அமர்த்தாதே, சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாதே, சிறுவர்களுக்கான சிறுவர் நேயமுள்ளதும் பாதுகாப்பு மிக்கதுமான சூழலொன்றை கட்டியெழுப்புவோம், வன்முறைகளில் இருந்து சிறுவர்களை நாம் பாதுகாப்போம் போன்ற பல்வேறு பதாதைகள் தாங்கிய வண்ணம் நடைபவனி இடம்பெற்றது .

பேரணியில் முத்தையன்கட்டுகுளம் கிராம சேவையாளர் பவிதா, வெத்தேல் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் இயக்குனர் காலேப் மற்றும் உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், சிறுவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

















# தோப்பூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபவனி

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை, தோப்பூர் பிர தேசத்தின் முதல் முஸ்லிம் மகளிர் பாடசாலையான தோப்பூர் - பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விழிப் புணர்வு நடை பவனி நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

1925 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட தோப்பூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

இதில் சாதனை படைத்த மாணவிகள், முன்னாள் அதிபர்கள், பாடசாலையில் கற்பித்து ஓய்வுபெற்ற முன்னாள் ஆசிரியர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட உள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.குணநாதன் கலந்து சிறப்பிக்க உள்ளார்.

பாடசாலை முதல்வர் ஏ.பீ.ஏ.ஜப்பார் தலைமையில் நடைபெற்ற நடைபவனியில், தற்போது பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிகள்,பழைய மாணவிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலை முன்றிலில் ஆரம்பமான நடைபவனி சேருவில வீதி,மத்திய வீதி, தோப்பூர் பிரதான வீதியூடாக பயணித்து மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.







# இன்றைய ராசி பலன்கள் - 23.08.2025




இன்று அவ்வளவு எளிதாக எதையும் பெற முடியாது. எனவே கவனமாகவும் உறுதியாகவும் செயல் பட வேண்டிய நாள்.

பணியைப் பொறுத்தவரை இன்று பலன் தரும் நாளாக இருக்காது. இன்று கூடுதல் பணிகள் காணப்படும். என்றாலும் நீங்கள் நீங்கள் முறையான திட்டமிடல் மூலம் பணிகளை கையாள்வீர்கள்.

உங்கள் தாயுடனான கருத்து வேறுபாடு வீட்டில் குழப் பத்தை ஏற்படுத்தும். நீங்கள் சூழ்நிலையை பக்குவ மாக கையாள வேண்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. உங்கள் ஒவ்வொரு பணத்தையும் கவனமாக செலவு செய்ய வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிரம்பி காணப்படும். எனவே எந்த விஷ யத்தையும் நீங்கள் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் அதிக பொறுப்புகள் காணப்படும். பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது உங்கள் ஆர்வத்தை மேம்படுத்த உதவும்.

நீங்கள் உங்கள் உறவில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் துணை யிடம் இது பற்றி பேசுவீர்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு. உங்கள் செலவுகளை கண்காணிக்கவும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக் கியத்தில் கவனம் தேவை.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங் களின் நட்பு பட்டியலில் கூடுதல் நண்பர்கள் இடம் பெறுவார்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் தொடர்பாடல் திறன் உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை மேம்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிறப்பாக வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப் படுகின்றது. உங்கள் திறமையை பயன் படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்குகளை குறித்தநேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செல விடுவீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது.

சிறுகடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் மற்றும் திட காத்திரம் பராமரிப்பீர்கள்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண போராட வேண்டும். தியானம் அல்லது யோகா பயில்வதன் மூலம் பதற்றத்தைச் சமாளிக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பதற்றத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் தவறு காண்பீர்கள். இதனால் விரோதம் விளையும். இதனை சமாளிக்க முயல வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிக்க நீங்கள் கண்டிப்பான திட்டம் மேற்கொள்ள வேண்டும்.

சளி மற்றும் தலை வலி காரணமாக உடல் ஆரோக் கியம் பாதிக்கப்படும்.




எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்சி வசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச்சிகரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண் காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத்தாழ்வுகளை சந்திப்பீர்கள்.

பதற்றமும் பேரார்வமும் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல.இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.




நீங்கள் விரைந்து பணிகளை முடிப் பீர்கள். உங்கள் தன்னம்பிகையை வளர்த்துக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் அங்கீகாரம் கிடைக் கப் பெறுவீர்கள். அதிக வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்க ளுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுமுறையில் உற்சாகம் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சமூகமாக இருக்கும். இன்று அதிக பண வரவு காணும் நிலையில் இருப் பீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்த விதமான பெரிய பிரச் சினையும் இருக்காது.




உங்கள் செயல்களை கண் காணிக்க வேண்டும். உங்கள் இலக்கு களை அடைய நீங்கள் போராட வேண்டும். சூழ்நிலையை பொறுமை யுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

சக பணியாளர்களுடன் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் கீழ் பணி புரிபவர்களிடம் கவனமாக இருங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடத்த வாய்ப்புள்ளது. உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு இல்லாததே இதற்கு காரணம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. நீங்கள் அதிகம் செலவு செய்வீர்கள். இதனால் பணப் பிரச்சினை உருவாகும்.

பதற்றம் காரணமாக தலை வலி ஏற்படும். தியானம் மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.08.2025




இன்றைய நாள் உங்களுக்கு உகந்த நாளாக இருக்காது.இன்றைய நாள் சுமூகமாக இருக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியிடத்தில் கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டி யிருக்கும். உங்கள் பணிகளை திறமையான முறையில் ஆற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

அகந்தைப் போக்கு காரணமாக உறவில் இணக்க மின்மை காணப்படும்.எனவே இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பண இழப்புக் கான வாய்ப்பு உள்ளது.

தலைவலி மற்றும் முதுகுவலியால் நீங்கள் பாதிக்கப் படலாம். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படும். சுய முயற்சி மூலம் உங்கள் கடின உழைப்பிற்கு பலன் பெறுவீர்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைப் பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப் பிற்கு பாராட்டு கிடைக்கும்.

காதலர்களிடையே நல்ல புரிந்துணர்வு காணப் படும். இதனால் இருவரும் உறவில் கடந்த கால வேறு பாடுகளை மறந்து உறவை புதுப்பிக்கலாம்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.




இன்று சிந்தனை மிகுந்த நாளாக இருக்கும். எனவே உங்கள் இலக்கு களை திட்டமிட்டு மேற்கொள்வது நல்லது.

இன்று பணியிடத்தில் மிதமான பலன் களே கிடைக்கும்.நீங்கள் பணியில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர் கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் தேவை களை பூர்த்தி செய்து கொள்ள இன்று பணப்பற்றா- க்குறை காணப்படும்.

நீங்கள் தலை வலியால் பாதிக்கப்படலாம். ஓய்வுக்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




உங்கள் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் மூலம் நீங்கள் நன்மை அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு உங்கள் மேலதி காரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக உறவாடு வீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கணிச மான தொகை உங்களிடம் காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பண வரவு காணப்படும்.

நம்பிக்கையான எண்ணம் மூலம் உங்கள் ஆரோக் கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.

# யானை – மனித மோதலைக் கட்டுப்படுத்த திருமலையில் மாவட்ட மட்டக் கலந்தாய்வு







**(ஏ.எச்.ஹஸ்பர்)**

ஜனாதிபதியின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதலின்படி மாவட்ட மட்டத் தில் யானை – மனித மோதல் தொடர் பிலான குழுக்களை அமைப்பதற்காக திருகோணமலை மாவட்டக் கூட்டம் நேற்று திருகோணமலை மாவட்ட செயலாளர் டபிள்யூ.ஜி.எம்.ஹேமந்த குமார தலைமையில் மாவட்டச் செயலக உப ஒன்று கூடல் மண்டபத்தில் நடை பெற்றது.

இந்நிகழ்வில், மாவட்டத்தில் உள்ள யானைகளின் எண்ணிக்கை, யானை அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள கிராம அதிகாரி பிரிவுகள், 2025 ஆம் ஆண் டில் இதுவரை நிகழ்ந்த யானை – மனித உயிரிழப்புகள் மற்றும் சொத்துச் சேதங் கள், யானைகள் ஏற்படுத்தும் சேதங் களைக் குறைப்பதற்கான தீர்வுகள், மேலும் 2026 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு திட்டம் தொடர்பான விரி வான விளக்கத்தை திருகோணமலை மாவட்ட வனவிலங்கு மற்றும் வன பாது காப்புத் திணைக்களத்தின் உதவி பணிப் பாளர் விஜயசிங்ஹ வழங்கினார்.

இந்த நிகழ்வில், வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவின் ஒருங்கிணைப்புச் செயலாளர், தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஷ ான் அக்மிமனவின் ஒருங்கிணைப்புச் செயலாளர், கந்தளாய் பிரதேச சபைத் தலைவர், பிரதேச செயலர்கள், அனர்த்த முகாமைத்துவ நிலைய மாவட்டஓ பிர திப் பணிப்பாளர், பொலிஸ், இராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.